**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 224/2019 பி.வா.சா.3**

2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 03–ம் நாள் செவ்வாய் கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு17(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

பெயர்: போஸ் தந்தை பெயர்: பெரியண்ணன்

-------------------------------------------------------------------

<u>03.06.2026.</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. நான் சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பானை நீதிமன்றத்திலிருந்து வரவில்லை. முத்துராமன் சாட்சியம அளிக்க அழைத்ததால் சாட்சியம்அளிக்கிறேனா என்றால் பாண்டியம்மாள் அழைத்து வந்தாள். பி.வா.சா.2 முத்துராமன் எங்கள் ஊர் முன்னாள் president ஆவார். அவர் எனது பங்காளி ஆவார். பாண்டியம்மாள் பங்காளி உறவு ஆவார். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது.

2. ராமுசேர்வை மகன் பொன்னையா சேர்வை பெயரில் செட்டில்மெண்ட் பட்டா உள்ளது. பொன்னையா சேர்வை பாண்யம்மாளின் தாத்தா ஆவார். பொன்னையா சேர்வைக்கு ஒரே பையன் திருமலை சேர்வை ஆவார். திருமலை சேர்வைக்கு ஒரே மகள் பாண்டியம்மாள் ஆகும். திருமலை சேர்வைக்கு 3 மகன்கள், 1 மகள் என்றால் சரியல்ல. திருமலை சேர்வை குடும்பத்தில் நடந்த பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியாது.

3. SLR யின் பொன்னையா சேர்வை, முத்தையா சேர்வை பெயரில் பட்டா ஏற்பட்டது. தாவாச் சொத்தை மேற்படி இருவரும் எப்படி பங்கு பிரித்து கொண்டார்கள் என்பது தெரியாது. தாவாச் சொத்து மொத்தம் 16 செண்டாகும். மேற்படி 16 செண்டில் பாண்டியம்மாள் 2008 ல் விற்பனை செய்யும் போது 3 நபர்கள் பெயரில் பட்டா இருந்தது என்றால் இல்லை. 2 நபர்கள் பெயரில் தான் பட்டா இருந்தது.

4. UDR பட்டாவில் வாதி காயாம்பு , பாண்டியம்மாள், முத்தையா பெயரில் பட்டா இருந்தது என்றால் இல்லை. மேற்படி பட்டாவின் அடிப்படையில் பாண்டியம்மாள் அவரது பங்கான 5 செண்டை வசந்தாவிற்கு விற்று விட்டார் என்றால் சரிதான். நான் 2008 கிரையப்பத்திரத்தை பார்க்கவில்லை. மேற்படி கிரையப்பத்திரத்தின் படி பாண்டியம்மாள் அவரது சொத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் 5 செண்டை விற்பனை செய்ததது போக பாண்யம்மாளுக்கு 2 ¾ செண்டு உள்ளது. மேற்படி

பத்திரத்தில் எனக்கு பூர்வீக பாத்தியமாகவும் என் பெயரில் பட்டா எண் 570ல் கூட்டு பட்டா ஏற்பட்டு என் பாகத்து கிடைத்ததும், என அனுபவத்தில் இருப்பதுமான சொத்தை நான்குமால் காட்டி எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விவரங்களை எனக்கு தெரியும் என்றாலும் பாண்டியம்மாளுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.2 முத்துராமன் ஊர் தலைவர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கும் எனக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து குறித்து எந்த விவரமும் தெரியாமல் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.